**அனுப்புநர்** **பெறுநர்**

திரு.சா.சேதுராம வர்மா
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை - 600 006.

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண்.** 000314 /**எச்1**/ 2023 **நாள்** : 30.01.2023

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2023 – செய்முறைத் தேர்வுகளுக்கான தேதிகள் மாற்றம் - தொடர்பாக.

*****

ஏற்கனவே, மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாமாண்டு/ இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கு செய்முறைத் தேர்வுகள் 07.03.2023 முதல் 10.03.2023 வரையிலான நாட்களில் நடத்த வேண்டுமென தெரிவிக்கபட்டிருந்தது.

இந்நிலையில், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்பின்படி மேல்நிலை முதலாமாண்டு/ இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் பள்ளி மாணாக்கருக்கு **செய்முறைத் தேர்வுகள் 01.03.2023 முதல் 09.03.2023** வரையிலான நாட்களில் நடத்தப்படவுள்ளது.

இச்செய்திக்குறிப்பை தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறும் ஒளி/ஒலி பரப்பிடுமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

'இது விளம்பரம் அல்ல' எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஒம்/-**

**இயக்குநர்**